**செ. கு. எண்**: 185 **நாள்**:22.05.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 22.5.2012

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தோலம்பாளையம் கிராமம், ஆலங்கண்டியைச் சேர்ந்த திரு. கரட்டி என்பவரின் மகன் திரு. நஞ்சன் 21.5.2012 அன்று காப்புக்காட்டில் காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், நெலாக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. மாறன் என்பவரின் மகன் கேத்தன் 22.5.2012 அன்று முக்கட்டி வன குடியிருப்பு அருகே காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த நஞ்சன் மற்றும் கேத்தன் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவங்களில் காலமான திரு. நஞ்சன் மற்றும் திரு. கேத்தன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**